## தலைப்பு 220 – ஆயுர்வேத திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆயுர்வேத திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆயர்வேத திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆயர்வேத திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

2018 தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்கான அறிக்கையின் பந்திக்கான தொடர்பு | அமுல்ப்படுத்தப்படாதிருந்த சிபாரிசுகள் | இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|
| 1.6.3 (அ) | நிதிப்பிரமாணம் 891 (1) இல் குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைப் பதிவேடு நாளதுவரையாக்கி பேணப்படுதல் வேண்டும். | 1.6.4 (அ) |
| 1.6.3 (ஆ) | நிதிப்பிரமாணம் 110 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழுள்ள படிவத்திற்கு இணங்க நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு நாளதுவரையாக்கி பேணப்பட்டிருக்கவில்லை. | 1.6.4 (ஆ) |
| 2.3 (அ) | பஞ்சகர்மம் மற்றும் மசாஜ் நிலையங்களை ஒழுங்குபடுத்துவதற்காக முறையான சட்டரீதியான கட்டமைப்பினை உருவாக்குவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2.3 (அ) |
| 2.3 (ஈ) | 2019 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் விரல் அடையாளமிடும் இயந்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படாத காலப்பகுதிக்காக மேலதிக நேர வேலைப்படி மற்றும் விடுமுறைதின சம்பளங்களைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காதிருத்தல் வேண்டும். | 2.3 (இ) |
| 2.4 | தாபன விதிக்கோவை, தேசிய பாதீட்டு சுற்றறிக்கை, அரசாங்க நிதி சுற்றறிக்கை என்பவற்றிலுள்ள | 2.1 |

ஏற்பாடுகளின் பிரகாரம் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு நடவடிக்கை எடுக்கும் பொறுப்பினை நிறைவேற்றாத உத்தியோகத்தர்களிடமிருந்து மிகைக் கட்டணம் விதிப்பதற்கு நிதிப்பிரமாணம் 104 (2) ‘‘ஆ‘‘ இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 (ஆ) அரசாங்க நிதி சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் தயாரித்து நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செயலாற்றல் அறிக்கையினை பாராளுமன்றத்தில் முன்வைத்தல் வேண்டும். 3.4 (ஆ)

3.3 அரசாங்க நிதியை சிக்கனமாகப் பயன்படுத்தி அத்தியவசியமமான மற்றும் முன்னுரிமையான குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக மாத்திரம் செயற்திட்ட பிரேரணை அமுல்ப்படுத்தப்பட வேண்டியதுடன் பொறுகை வழிகாட்டிக் கோவை சரியாக பின்பற்றப்பட்டது எனவும் வெளிப்படைத்தன்மையுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும் உறுதிப்படுத்துவதற்காக எழுத்துமூல சான்றினைப் பேணி பெறுகைகள் செயற்படுத்தப்படுதல் வேண்டும். 3.5

3.5 திணைக்களம் செலுத்திய சம்பளங்களிலிருந்து நிலுவைப் பணத்தை உடனடியாக அறவீடு செய்வதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது நிதிப்பிரமாணம் 104(2) ‘‘ஆ‘‘ இன் பிரகாரம் பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து மிகைக் கட்டணம் விதிப்பதற்கேனும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஆளணி நிருவாகப் பிரிவிற்கும் சம்பள நிருவாகப் பிரிவிற்குமிடையே நாளதுவரையாக தொடர்ச்சியான ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்தும் நிருவாக முறைமையினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். 3.7 (ஆ)

3.7 தேவைப்பாட்டினை சரியாக இனங்காணாதும் முறையான சாத்தியவள ஆய்வு இல்லாதும் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து இயந்திரங்களையும் வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு அல்லது ஆயர்வேத வைத்தியசாலைகள் அல்லது ஆயர்வேத கூட்டுத்தாபனத்தின் மருந்து உற்பத்திக்கு ஈடுபடுத்துவதற்காக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் இந்த ஒழுங்கீனங்களுக்காக பங்களிப்புச் செய்த அனைத்து உத்தியோகத்தர்கள் சம்பந்தமாகவும் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். 3.8 (உ)

## 1.6. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் வெதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதிவரை சட்டரீதியாக திணைக்களத்திற்கு உரிமை ஒப்படைக்கப்படாத 12 காணிகளின் பெறுமதியான ரூபா 2,318,020,000 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் சட்டரீதியாக திணைக்களத்திற்கு உரிமை ஒப்படைக்கப்பட்டிருந்த 07 காணிகளின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்கிக்கொள்ளப்படுகின்றது. காணிகளைப் பொறுப்பேற்கும் நடவடிக்கை இடம்பெற்று வருவதனால் தற்பொழுது பொறுப்பேற்கப்பட்டுள்ள காணிகளின் மதிப்பீட்டுப் பெறுமதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் கணக்குகளில் உரிய செம்மையாக்கல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணிகளின் உரிமைகளைப் பொறுப்பேற்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு கணக்குகளில் உரிய செம்மையாக்கல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | நிதி பொருளாதாரத்தை நிலைப்படுத்துதல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வழங்கப்பட்ட CGO/ASM/Policy/Cir/(VOL III) மற்றும் 2023 சனவரி 18 ஆந் திகதிய 1/2023 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கு தணிக்கையாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்த திணைக்களத்தின் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 567,396,547 ஆக இருந்ததுடன் கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 1,161,120,186 ஆக இருந்ததனால் ரூபா 593,723,635 தேறிய வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. ரூபா 563,416,490 பெறுமதியான 14 கட்டிடங்கள் கணக்கு தணிக்கையாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்படாமையும், | சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்கிக்கொள்ளப்படுகின்றது. காணிகளின் உரிமையில் மற்றும் மதிப்பீட்டுப் பெறுமதியில் காணப்பட்ட சிக்கலின் காரணமாக இக்குறைபாடு ஏற்பட்டுள்ளது எனவும் துரிதமாக நடவடிக்கையை முடிவுறுத்தி அடுத்துவரும் கணக்கு அறிக்கைகளின் பெறுமதிகள் சரிசெய்யப்படும் எனவும் தெரிவிக்கிறேன். | காணிகளின் உரிமையை பொறுப்பேற்பதற்கு துரித நடவடிக்கை எடுத்து கணக்குகளில் உரிய செம்மையாக்கல்களை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொரல்லை வைத்தியசாலை கட்டிடம் ரூபா 93,934,658 குறைத்தும் திரப்பனை சமூக சுகாதார நிலையக் கட்டிடம் ரூபா 7,430,962 ஆல் அதிகரித்தும் கணக்கு தணிக்கையாளர் நாயகத்திற்கு அறிக்கையிட்டமையும் ரூபா 56,196,547 பெறுமதியான 12 கட்டிடங்கள் கணக்கு தணிக்கையாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட்ட போதிலும் கணக்கீடு செய்யப்படாமையும் இந்த வித்தியாசத்திற்கு காரணமாக இருந்தது. | | |
| (இ) | சிகாஸ் கணனி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் ஏனைய இயந்திரம் மற்றும் உபகரண செலவு விடயத்தின் கீழ் ரூபா 10,905,422 தொகை மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிக்கு செம்மையாக்கப்பட்டிருந்தும் அது தொடர்பான ஆரம்ப மீதிக்கு மேற்கொள்ளப்பட்ட அந்த திருத்தங்கள் பற்றி கணக்கு குறிப்புக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டிற்கான கணக்குகளில் காணப்பட்ட குறைபாடுகளை சரி செய்வதற்காக அரசாங்க கணக்குகள் திணைக்களத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அதற்கிணங்க இந்த வித்தியாசம் உருவாகியது எனவும் இது சம்பந்தமாக அரசாங்க கணக்குகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி தவறுகளை சரியாக இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட வழமைக்கு மாற்றமான செம்மையாக்கல்கள் சம்பந்தமாக விபரமான தகவல்களை குறிப்பக்களின் மூலம் வெளிபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தின் சிகாஸ் கணனி முறைமையில் பேணப்பட்டிருந்த நிதியற்ற சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 90,875,713 ஆன அலுவலக உபகரணங்கள் மற்றும் மின்சார உபகரணங்களின் மீதி ரூபா 91,218,614 ஆக ரூபா 342,901 ஆல் அதிகரித்தும் மேற்கூறிய பதிவேட்டின் பிரகாரம் ரூபா 275,315,783 ஆன மருத்துவ உபகரணங்களின் மீதி ரூபா 273,099,263 ஆக ரூபா 2,216,520 குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | சிகாஸ் முறைமையில் உள்ளடக்கப்பட்ட சொத்துக்கள் பதிவேட்டில் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள அனைத்து பெறுமதிகளும் சமனானவை மற்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தவறுகளை அரசாங்க கணக்குகள் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியற்ற சொத்துக்களை கணக்கீடு செய்யும் போது சரியாக வகைப்படுத்துதல் வேண்டும். |
| (உ) | நிதியற்ற சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள கணனி துணைக்கருவிகளின் மீதி மின்சார உபகரண மீதி, மருத்துவ உபகரண மீதி என்பன முறையே ரூபா 5,881,397, ரூபா | வகைப்படுத்தல் தவறுகளை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கணனி கொள்வனவு செய்தல்களை சுகாதார அமைச்சு செலவு | நிதியற்ற சொத்துக்களை கணக்கீடு செய்யும் போது சரியாக வகைப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 14,835,143 மற்றும் ரூபா 275,315,783 ஆகும். எவ்வாறாயினும் முன்னைய ஆண்டுகளில் மேற்கொண்ட முறையே ரூபா 10,375,439, ரூபா 6,273,197, ரூபா 3,638,628 என்பன கொள்வனவு செய்தல் தொடர்பான விடயங்களின் கீழ் காட்டாது அலுவலக உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூா 20,729,160 ஆன கணனி கொள்வனவுகள் கணனி துணைக் கருவிகளின் கீழ் நிதியற்ற சொத்துக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | விடயங்களினூடாக மேற்கொள்ளப்படதனால் இரட்டிப்பு தவறுகள் ஏற்படாதவாறு மாற்றல் கட்டளை பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் அடுத்துவரும் ஆண்டில் சொத்துக்கள் பட்டியலுக்கு உள்ளடக்கப்படும். | பெற்றுக்கொள்ளப்படுகின்ற நிலையான சொத்துக்கள் உரிய நிதி ஆண்டில் நியதியற்ற சொத்துக்களின் கீழ் அறிக்கையிடுவதற்கு கவனித்துக் கொள்ளுதல் வேண்டும். |
| (ஊ) | குத்தகை தவணைப் பணம் முறைமையின் கீழ் 2012 ஆம் ஆண்டின் போது டொயோடா லங்கா நிறுவனத்திடம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 8,400,000 கிரயமான வேனின் குத்தகை காலப்பகுதியின் பின்னர் திணைக்களத்தினால் பொறுப்பேற்க்கப்பட்டிருந்தும் நிதியற்ற சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய வேன் 2022 நவம்பர் 29 ஆந் திகதி திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் தவறுதலாக அதன் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு முயாதிருந்தது. | உரிய பெறுமதியை நிதியற்ற சொத்துக்களாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | வேலை முடிவுறுத்தப்பட்ட கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்களின் கிரயம் மூலதனமாக்கப்படாது 2018 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டுவரை நிர்மாணங்களுக்காக மேற்கொள்ள செலவு முழுவதும் நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறை கணக்கின் மீதி ரூபா 1,035,539,978 வரை அதிகரித்திருந்தது. | 2018 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை வேலை முடிவுறுத்தப்பட்ட கட்டிடங்களின் இறுதி வேலை அறிக்கை மற்றும் கட்டமைப்புக்களின் இணக்கப்பாட்டு சான்றிதழ் கிடைக்கும் வரை நிர்மாணங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு முழுவதும் நடைமுறை வேலைக் கணக்கின் கீழ் காட்டப்பட்டுள்ளது எனவும் இது சம்பந்தமாக முறைப்படி நடவடிக்கை எடுத்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கிறேன். | வேலை முடிவுறுத்தப்பட்ட கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்களின் கிரயத்தை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்வுச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்திடம் ரூபா 93,944,999 பெறுமதியான வாகனங்கள் காணப்படுகின்றன என நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் சிகாஸ் முறைமையில் ஒவ்வொரு வாகனம் தொடர்பான விபரமான தகவல்கள் குறிப்பிடப்பட்டிருக்காததனால் திணைக்களத்திடமுள்ள அனைத்து வாகனங்களின் பெறுமதியும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு முடியாதுள்ளது. | சிகாஸ் கணனி முறைமை பேணப்படுகின்ற நிதியற்ற சொத்துக்கள் பதிவேட்டிலுள்ள ரூபா 93,944,999 பெறுமதியான வாகனங்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. திணைக்களத்திடமுள்ள அனைத்து வாகனங்களின் பெறுமதியையும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சிகாஸ் கணனி முறைமையில் ஒவ்வொரு வாகனம் தொடர்பான தகவல்களைக் குறிப்பிட்டு போதியளவான அறிக்கையை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 பொறுப்புக்களும் கடப்பாடுகளும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை ஆயர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் பெற்றுக்கொண்ட மருந்துகளுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,334,668 செலுத்த வேண்டியிருந்தது என அக்கூட்டுத்தாபனத்தின் கணக்குகளின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட போதிலும் உரிய பொறுப்புக்கள் ரூபா 7,027,978 ஆக திணைக்களத்தின் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | 2023 பெப்ரவரி 28 ஆந் திகதியளவில் அறிக்கையிடப்பட்ட அனைத்து பொறுப்புக்களும் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் கணக்காய்வு அவதானிப்புக்களில் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கிறேன். | இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் தகவல்களுடன் ஒப்பீடு செய்து சரியான பொறுப்புக்களை இனங்கண்டு கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்படுதல் வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டுகளின் போது இலங்கை ஆயுர் வேத மருந்துக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த | 2023 பெப்ரவரி 28 ஆந் திகதியளவில் அறிக்கையிடப்பட்ட அனைத்து பொறுப்புக்களும் | அனைத்து பொறுப்புக்களையும் சரியாக இனங்கண்டு |

| | | |
|---|---|---|
| மருந்துகளுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,272,068 செலுத்த வேண்டியிருந்தது என கூட்டுத்தபானத்தின் கணக்குகளின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அப்பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் கணக்காய்வு அவதானிப்புக்களில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கிறேன். | பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் காட்டப்படுதல் வேண்டும். |

### 1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே தரப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் சில பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பிணை வைப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891 (1) | பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 முற்பணக் கணக்குகள் மீதிகள்

முற்பணக் கணக்குகளில் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6, 1.7 மற்றும் 6.3 ஆம் பிரிவுகள் மற்றும் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1.7 ஆம் பந்தியின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் இரண்டு மாதங்களுக்குள் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் இடமாற்றமாகி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 09 உத்தியோகத்தர்களின் | இடமாற்றம் பெற்று 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகால எல்லையை மிகைத்திருந்த 10 உத்தியோகத்தர்களின் மொத்தமாக ரூபா 316,249 தீர்த்துவைக்காத கடன் மீதிகளில் ரூபா 1,810 தொகையான ஒரு மீதி தீர்த்துவைக்கப்பட்டுள்ளது எனவும் மொத்தமாக ரூபா 179,023 ஆன கடன் மீதிகளுடனான 06 | தாபன விதிக் கோவையில் மற்றும் தேசிய பாதீட்டு சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு நடவடிக்கை எடுக்கும் பொறுப்பினை நிறைவேற்றாத உத்தியோகத்தர்களிடமிருந்து உரிய பணத்தை அறவீடு செய்வதற்கு நிதிப்பிரமாணம் 104(2) |

| | | | |
|---|---|---|---|
| | மொத்தமாக ரூபா 314,439 கடன் மீதியும் 08 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 177,760 கடன் மீதியும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களின் தகவல்கள் இல்லை எனவும் தெரிவிக்கிறேன். | “ஆ” இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். . |
| (ஆ) | தபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.4 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு உத்தியோகத்தர் ஓய்வுபெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள காலத்தில் அவரிடமிருந்து அறவிட வேண்டிய அனைத்து கடன்கள் தொடர்பான விபரம் ஓய்வூதியப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன் 4.2.5 ஆம் பிரிவின் பிரகாரம் உத்தியோகத்தரின் திரண்ட ஓய்வூதியத்திலிருந்து பணிக்கொடை பணத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வுபெற்று 20 மாதங்களை மிகைத்த 08 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 393,510 கடன் மீதியினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மொத்தமாக ரூபா 62,050 கடன் மீதி தொடர்பான 03 உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகளை தேடிக் கண்டுபிடிக்க முடியாதுள்ளது. மொத்தமாக ரூபா 181,160 கடன் மீதி தொடர்பான 02 உத்தியோகத்தரின் இளைப்பாற்று பணிக்கொடை பணம் செலுத்தப்படாததனால் அவற்றினை செலுத்தும் போது கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மொத்தமாக ரூபா 150,300 கடன் மீதிகள் தொடர்பான 03 உத்தியோகத்தர்களின் சேவைக்காலம் போதியதாக இல்லாததனால் ஓய்வூதியத்திற்கு அல்லது பணிக்கொடைக்கு தகமை இல்லை. | ஒரு உத்தியோகத்தர் ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள காலத்தில் அவரிடமிருந்து அறவிட வேண்டிய அனைத்து கடன்கள் தொடர்பான விபரம் ஓய்வூதிய பணிப்பாளருக்கு சமர்பிக்காத, ஓய்வூதியத்திற்கு தகமை பெறுவதற்குரிய சேவைக் காலத்தை பூரணப்படுத்தாத உத்தியோகத்தர்களின் ஓய்வுதியம் பெறுதலானது கடனை அறவீடு செய்யாது அங்கீகரித்த மற்றும் கோவைகளின் பாதுகாப்பு சம்பந்தமாக கவனயீனமாக நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்களிடமிருந்து இப்பணத்தை அறவீடு செய்வதற்கு நிதிப்பிரமாணம் 104 (2) “ஆ“ இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5, 4.6 மற்றும் 6.3 ஆம் பிரிவுகள், 2019 யூன் 27 ஆந் திகதிய 05/2019 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 03 (ஆ) பந்தி மற்றும் 2017 திசெம்பர் 29 ஆந் திகதிய 262/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் மரணமடைந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மரணமடைந்து 12 மாதங்களை மிகைத்த 07 உத்தியோகத்தர்களிடமிருந்து | மொத்தமாக ரூபா 367,544 கடன் மீதிக்குரிய 04 உத்தியோகத்தர்கள் தொடர்பான மரண பணிக்கொடைப் பணம் செலுத்தப்படாததனால் அவற்றினை செலுத்தும் சந்தர்ப்பத்தில் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் மொத்தமாக ரூபா 231,800 கடன் மீதிக்குரிய 03 உத்தியோகத்தர்கள் தொடர்பான தனிப்பட்ட கோவைகளை | தாபன விதிக் கோவை மற்றும் உரிய நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் தனிப்பட்ட கோவைகளின் பாதுகாப்பு சம்பந்தமாக கவனயீனமாக நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்களிடமிருந்து இப்பணத்தை அறவீடு செய்வதற்கு நிதிப்பிரமாணம் 104(2) “ஆ“ இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிட வேண்டிய மொத்தமாக ரூபா 599,344 கடன் மீதியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேடிக்கண்டு பிடிக்க முடியவில்லை. | |
| (ஈ) | தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 21.3 ஆம் பிரிவின் பிரகாரம் வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக நடாத்தப்படுகின்ற ஒழுக்காற்று விசாரணைகளை முடியுமான அளவில் தாமதமின்றி முடிவுறுத்துதல் அத்தியவசியமானதாக இருந்த போதிலும் அவ்வாறு விசாரணை நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படாமையால் வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டு 1 ஆண்டிற்கும் 3 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த 04 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 425,060 தொகையையும் 05 ஆண்டுகள் காலத்தை மிகைத்திருந்த 05 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 127,060 தொகையையும் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | 1 ஆண்டிற்கும் 3 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த 03 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 275,000 கடனானது உரிய ஒழுக்காற்று விசாரணை முடிவடைந்ததன் பின்னர் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ரூபா 150,060 தொகையான மற்றைய உத்தியோகத்தர் தொடர்பாக கடனை தீர்த்துவைக்குமாறு கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. 05 ஆண்டுகள் காலத்தை மிகைத்திருந்த 05 உத்தியோகத்தர்களின் கடனை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பின்தொடர் நடவடிக்கை மற்றும் போதியளவு மேற்பார்வையின் மூலம் கடனை அறவீடு செய்வதனை துரிதப்படுத்துதல் வேண்டும். தாபனவிதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கும் பொறுப்பினை நிறைவேற்றாத உத்தியோகத்தர்களிடமிருந்து இப்பணத்தை அறவீடு செய்வதற்கு நிதிப்பிரமாணம் 104 (2) “ஆ“ இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2019 யூன் 27 ஆந் திகதிய 05/2019 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 3(உ)(ii) ஆம் பந்தியின் பிரகாரம் சேவையை கைவிட்டுச் சென்ற எனினும் மீண்டும் சேவையில் அமர்த்தப்படாத உத்தியோகத்தர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பித்து வதிவிடம் தொடர்பான விபரத்தை விசாரித்து பிரதேச செயலகத்தின் மூலம் அந்த உத்தியோகத்தரின் சொத்துக்கள் தொடர்பாக உறுதிப்படுத்தியதன் பின்னர் சட்டமா அதிபரின் மூலம் கடன் பணம் அறவீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சேவையை கைவிட்டுச் சென்ற 22 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய மொத்த கடன் | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கு போதிய தகவல்களை வெளிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. மொத்தமாக ரூபா 384,230 தொடர்பான 06 உத்தியோகத்தர்களுக்கு கடனை தீர்த்துவைக்குமாறு கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டதுடன் மொத்தமாக ரூபா 381,930 தொடர்பான 10 உத்தியோகத்தர்களுக்குரிய பிணைக் கடன் கோவைகளை தேடிக்கண்டு பிடித்து மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சுற்றிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கு போதிய தகவல்களை வெளிப்படுத்த முடியாமை சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்களிடமிருந்து இப்பணத்தை அறவீடு செய்வதற்கு நிதிப்பிரமாணம் 104(2) “ஆ” இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மீதியாகிய ரூபா 1,147,660 மேற்கூறிய ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்காததுடன் அவற்றில் 67 சதவீதம் அதாவது ரூபா 766,160 ஆனது 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதியாகும்.

### 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்த வேண்டியிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையை வினைத்திறனாக்குவதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய போதிலும் அந்த மீளாய்வினை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தயாரித்து நாளதுவரையாக்கிய திணைக்கள சுற்றறிக்கை தற்பொழுது வழங்கப்பட்டுள்ளதுடன் கணக்குகள் பிரிவு, சம்பளப் பிரிவு, வழங்கல் பிரிவு என்பவற்றின் மூலம் தற்பொழுது தெரியப்படுத்தி உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைக்குரிய அறிவுறுத்தல் கடிதம் நிறுவனத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | | |
| (அ) | 1961 இன் 31 ஆம் இலக்க ஆயர்வேத அதிகாரச் சட்டம் | அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் ஆயுர்வேத வைத்தியசாலை, ஆயுர்வேத மருந்து உற்பத்திசாசலை, ஆயுர்வேத மருந்து களஞ்சியம் என்பன ஆயுர்வேத ஆணையாளரினால் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் பஞ்சகர்மம் மற்றும் மசாஜ் நிலையங்களை பதிவுசெய்தல் தொடர்பான ஏற்பாடுகள் அதிகாரச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக் காததனால் பஞ்சகர்ம மருத்துவ முறைமையின் பயன்பாட்டினை ஒழுங்குபடுத்த முடியாதிருந்தது. | ஆயுர்வேத அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் மசாஜ் நிலையங்களை ஒழுங்குபடுத்த முடியாது எனவும் சுதேச மருத்துவ அமைச்சு செயலாளரின் கட்டளையின் அடிப்படையில் சுற்றுலா சபையின் அங்கீகாரத்தினைப் பெற்ற ஹோட்டல்கள் மற்றும் ஏனைய சுற்றுலா கவர்ச்சி நிறுவனங்களுக்காக மாத்திரம் பதிவுசெய்தலினை வழங்குதல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | பஞ்சகர்மம் மற்றும் மசாஜ் நிலையங்களை ஒழுங்குபடுத்துவதற்காக முறையான சட்டரீதியான ஒரு கட்டமைப்பினை உருவாக்குவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 770 (4) | செயற்படுவதிலிருந்து அப்புறப்படுத்தி பல ஆண்டுகள் கடந்திருந்தும் ஒரு ஜீப் மற்றும் ஒரு வேனை திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கு 2023 மே 20 ஆந் திகதி வரையும் நடவடிக்கை | ஜீப்பினை திருத்தம் செய்யும் நடவடிக்கைகளில் 80 சதவீதம் அளவில் தற்பொழுது முடிவடைந்துள்ளதுடன் வேனுக்குத் தேவையான உதிரிப் பாகங்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாமையின் காரணமாக திருத்தம் செய்யும் நடவடிக்கை தாமதமடைந்துள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | நிதிப்பிரமாணம் 880 மற்றும் 881 | 2023 மார்ச் 31 ஆந் திகதி வரையும் ஆயுர்வேத திணைக்களமும் அதற்குரிய 09 நிறுவனங்களும் பிணைவைக்க வேண்டிய 20 உத்தியோகத்தர்கள் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் இது சம்பந்தமாக தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் துரிதமாக சேமிப்புக் கணக்கினைத் திறந்து பிணையை வைப்புச் செய்து அறிக்கையிடுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும |
| (iii) | நிதிப் பிரமாணம் 1647 (ஆ) | வாகனங்களையும் அவற்றின் உபகரணங்களையும் உள்ளடக்கி முழுமையான மீளாய்வு நடாத்த்பட வேண்டிய போதிலும் தீணைக்களத்தில் உள்ள மோட்டார் சைக்கிள்களை உள்ளடக்கி 55 வாகனங்கள் சம்பந்தமாக மேற்கூறிய ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு பதவிநிலை உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் பொருத்தமான ஒரு மீளாய்வுச் சபையை நியமித்து திணைக்களத்தின் வாகனங்கள் சம்பந்தமாக முறைப்படியான ஒரு மீளாய்வினை நடாத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும |
| (iv) | நிதிப்பிரமாணம் 1647 (உ) | வாகனங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களால் தமது பொறுப்பில் உள்ள மோட்டார் வாகனங்கள் தொடர்பாக ஒவ்வொரு வாகனத்தின் வகையும் வடிவமைப்பும், பதிவு செய்தல் இலக்கமும், தமக்கு ஒப்படைக்கப்பட்ட திகதியும், ஒப்படைப்புத் திகதியும் அது தொடர்பான விபரமும் ஏனைய முறையான | திணைக்களத்திடமுள்ள அனைத்து வாகனங்கள் சம்பந்தமாக ஒவ்வொரு வாகனத்திற்குமுரிய விபரங்களை உள்ளடக்கிய ஒரு அறிக்கை போக்குவரத்து உத்தியோகத்தரின் பொறுப்பில் காணப்படுவதுடன் அதனை முறைப்படியாக ஆவணப்படுத்தி பேணுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தகவல்களைக் காட்டும் ஒரு பதிவேடு வைத்திருக்கப்பட வேண்டிய போதிலும் அந்த ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 2(iv) ஆம் பந்தி | நேரத்தை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேர வேலைப்படி மற்றும் விடுமுறைதின சம்பளங்களைச் செலுத்தும் போது உரிய காலத்தை விரல் அடையாளமிடும் இயந்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் விரல் அடையாளமிடும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படாது வருகை பதிவேட்டினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது மேலதிக நேர வேலைப் படி மற்றும் விடுமுறை தினச் சம்பளங்களாக ரூபா 63,411,490 செலுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. கொரேனா தொற்றுநொய் நிலைமையின் அடிப்படையில் வருகைப் பதிவேட்டினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேர வேலைப் படியினையும் விடுமுறை தின சம்பளத்தையும் செலுத்துதல் இட்ம்பெற்றுள்ளதுடன் 2023 மார்ச் 01 ஆந் திகதியின் பின்னர் மேலதிக நேர வேலைப்படியையும் விடுமுறைதின சம்பளங்களையும் செலுத்தலினை சிபார்சு செய்யும் போது விரல் அடையாளமிடும் இயந்திரங்களைப் பயன்படுத்தி தயாரித்த அறிக்கைகளுடன் ஒப்பிட்டு பார்த்து கொடுப்பனவு செய்தல் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. | அரசாங்க நிருவாக சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய காலம் விரல் அடையாளமிடும் இயந்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தாத சந்தர்ப்பங்களின் போது காலத்தை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்ட மேலதிக நேர வேலைப்படியினையும் விடுமுறைதின சம்பளத்தையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காதிருத்தல் வேண்டும். |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 5.5 ஆம் பந்தி | அரசாங்க நிறுவனங்களினால் புதிய கட்டணங்களை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் பாராளுமன்ற அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் ஆயுர்வேத அதிகாரச் சட்டம் அல்லது ஏனைய அவ்வாறான | ஆயுர்வேத திணைக்களத்தின் அனைத்து வருமானங்களுக்குமாக பொதுத் திறைசேரியில் அங்கீகரித்த வருமான குறியீட்டின் கீழ் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கும் வருமான கணக்கீட்டு | அரசாங்க நிதி சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எழுத்துமூல சட்டங்களின் மூலம் ஏற்பாடு வழங்கப்படாது மீளாய்வாண்டில் திணைக்களத்தின் சேவை நாடுனர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 21,564,057 தொகையான பல்வேறு கட்டணங்கள் திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தராக நடவடிக்கை எடுக்கின்ற விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் 20.03.99.00 என்ற வருமான குறியீட்டின் கீழ் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | உத்தியோகத்தராக ஆயுர்வேத ஆணையாளருக்கு நடவடிக்கை எடுப்பதற்கும் முடியுமான வகையில் சட்டரீதியான பின்னணியினை முறைப்படியாக தயாரிப்பதற்கும் 2023 ஆம் ஆண்டின் போது ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவின் தீர்மானத்திற்கு இணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க கட்டண்ங்களை திருத்தம் செய்வதற்கும் புதிதாக கட்டணங்களை அறிமுகப்படுத்துவதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிக்கொள்கை சுற்றறிக்கையின் 04 (அ) (இ) மற்றும் பட்டோலை இலக்கம் 01 | வருமானங்கள் மற்றும் நிலுவை வருமானங்களின் அளவுகளை தெளிவாக காட்டும் வகையில் அறிக்கைகள் பேணப்பட்டிருக்கவில்லை. சேகரித்த வருமானங்களை சேகரிக்கும் கணக்குகளில் அல்லது வைப்புக் கணக்குகளில் வைத்திருக்காது அடுத்துவரும் மாதத்தின் முதலாம் வாரத்திற்குள் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 2020 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை பொது வைப்புக் கணக்கிற்கு செலவுவைக்கப்பட்டிருந்த ரூபா 4,336,500 தொகையான | 2022 ஆகஸ்ட் மாதத்திலிருந்து இது சம்பந்தமாக ஒரு வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் வருமானனங்களை முறைப்படியாக வகைப்படுத்தி கணக்கீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்க நிதி கொள்கை சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கட்டணம் செலுத்தும் வாட்டுக் கட்டணம் 2022 ஆகஸ்ட் 08 ஆந் திகதி வரை அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட மொத்தமாக ரூபா 1,163,684 தொகையும் சுற்றுலா இல்ல மற்றும் வதிவிட வருமானம் அரசாங்க நிருவாக அமைச்சின் செயலாளரின் வருமானக் குறியீடு 20.2.01.01 இற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக ஒரு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடக்கப்பட்டிருக்காததுடன் குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகளை மாற்றம் செய்யும் போது அதற்கிணங்க செயல்நடவடிக்கைத் திட்டத்தினை திருத்தம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க காலாண்டு அடிப்படையில் செயல்முன்னேற்றத்தை அறிக்கையிடுவதற்கு ஒரு நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்காததுடன் 2023 ஏப்ரல் 20 ஆந் திகதி வரை செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க பௌதீக செயல் முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்படவில்லை. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. உரிய பிரிவிற்கு தெரியப்படுத்தி எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமை உருவாகாமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வளங்களிலிருநது உச்ச அளவு பயன்பாட்டினை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தேவையான பொருத்தமான திருத்தங்களுடன் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அதன் வெற்றியளிக்கும் தன்மையை மதிப்பீடு செய்வதற்காக செயல்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்படுதல் |

வேண்டும்.

### 3.2 கடமைகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஆயுர்வேத சமூக மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் 2001 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டு வரை ஒரு முன்னோடி செயற்திட்டமாக அனுராதபுரம் மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்டு அதன் வெற்றியளிக்கும் தன்மைக்கு இணங்க 2005 ஆம் ஆண்டிலிருந்து ஏனைய மாவட்டங்களுக்கு வரிவுபடுத்தப்பட வேண்டிய போதிலும் அனுராதபுர மாவட்டத்தில் மாத்திரம் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. 2005 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டுவரை ரூபா 877.2 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்த இச்செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் தனியான நிதி ஏற்பாடு வழங்கப்படாதிருந்ததுடன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நோய் சிகிச்சை சேவை செயற்திட்டங்களின் கீழ் சம்பளங்கள், படிகள், உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகளை உள்ளடக்கிய மீண்டுவரும் செலவுகளுக்காக மாத்திரம் நிதி ஏற்பாட்டினை வழங்கி 218 உத்தியோகத்தர்களுக்கு சம்பளங்களும் படிகளுமாக ரூபா 148.3 மில்லியனும் ஏனைய செலவுகளுக்காக ரூபா 4.5 மில்லியனாக மொத்தமாக ரூபா 152.8 மில்லியன் செலவு செய்ய்பட்டிருந்தது. அதற்கிணங்க ஏனைய மாவட்டங்களை | சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்கப்படுவதுடன் இச்சேவைகள் தற்பொழுது ஒரு செயற்திட்டமாக அமுல்படுத்தப்படாததுடன் செயற்திட்ட கால எல்லை முடிவடைந்துள்ளதனால் தேசிய பாதீட்டு திணைக்களத்தினால் வேண்டிக் கொள்ளப்பட்டிருந்தும் தனியான நிதி ஏற்பாடு வழங்கப்படவில்லை. இச்சேவைகளுக்குரிய உத்தியோகத்தர்களுக்கு சம்பளங்களும் படிகளும் செலுத்துதலானது தீணைக்களத்தின் நோய் சிகிச்சை சேவை செயற்திட்டத்தின் கீழ் இடம்பெறுவதுடன் திணைக்கள நிதி ஏற்பாட்டின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்ற அலுவலகத்தை பராமரிப்பதற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் சமூக சுகாதார மேம்பாட்டு சேவைகளை சிறப்பாக திட்டமிட்டு நிறைவேற்றுவதற்கு 2023 செயல் நடவடிக்கைத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் ஆயுர்வேத சமூக சுகாதார மேம்பாட்டு | செயற்திட்ட கால எல்லை முடிவடைந்து செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படவில்லையாயின் அதனிடம் காணப்பட்ட பௌதீக மற்றும் மனித வளங்களை திணைக்களத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான கொள்கை ரீதியான அங்கீகாரத்தினைப் பெற்று அதற்கிணங்க செயற்திட்ட அலுவலகத்தை பராமரித்தல் மற்றும் பதவியணியினர்களுக்காக மேற்கொள்ளப்படும் செலவுகளை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கும் வகையில் விரிவுபடுத்தும் அளவில் வெற்றிகரமாக அமுல்ப்படுத்தாத இச்செயற்திட்டம் தொடர்பாக மீண்டுவரும் செலவுகள் மாத்திரம் திணைக்களத்தின் செலவு விடயங்களின் மூலம் செலவு செய்து ஆயுர்வேத சமூக சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை இன்னும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தலானது சச்சரவுத் தன்மையான ஒரு விடயமாகும். | நிகழ்ச்சித்திட்டத்தை எதிர்காலத்தில் அமுல்ப்படுத்த வேண்டிய முறைமை தொடர்பாக உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | ரூபா 350 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயமான மரபுரீதியான மருத்துவ அறிவினை பேணிப்பாதுகாக்கும் செயற்திட்டத்தின் II ஆவது கட்டம் 2020 ஆம் ஆண்டிலிருந்து அடுத்துவரும் 04 ஆண்டுகளுக்குள் அமுல்ப்படுத்துவதற்காக 2019 ஏப்ரல் 03 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2020 ஆம் ஆண்டின் போது செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டில் ரூபா 1,500,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டு 04 செயற்பாடுகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தும் பாரம்பரிய மருத்துவர்களை மதிப்பீடு செய்தல் என்ற ஒரு செயற்பாடு மாத்திரம் நிறைவேற்றப்பட்டு அதற்காக ரூபா 697,408 செலவு செய்யப்பட்டிருந்தது. | அப்போது நாட்டில் காணப்பட்ட பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு இணங்க இச்செயற்திட்டத்திற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிதி ஏற்பாடு குறித்த அளவில் ஒதக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் திட்டமிட்டவாறு செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக அங்கீகரித்த திட்டத்தின் பிரகாரம் நிதி ஏற்பாடு கிடைக்க வேண்டியிருந்தது. அதற்கிணங்க ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினை முகாமைத்துவம் செய்து திட்டமிட்ட ஒவ்வொரு நடவடிக்கையும் நிறைவேற்றப்படும். | நாட்டில் கணப்பட்ட பொருளாதார நிலைமையுடன் செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அமுல்ப்படுத்தும் போது உருவாகிய சிக்கல்களை மீண்டும் மீளாய்வு செய்துநிகழ்கால பொருளாதார நிலைமைக்கு பொருந்தும் வகையில் செயற்திட்டத்தை மீளமைப்புச் செய்வதற்குத் தேவையான கொள்கை ரீதியான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | ஆயுர்வேத திணைக்களமும் அதன் இணைந்த நிறுவனங்களும், வைத்தியசாலை மருத்துவ நிலையம் என்பவை உள்டளடங்கலாக முழுமையான நிறுவன முறைமையையும் உள்ளடக்கும் வகையில் முகாமைத்துவ தகவல் முறைமையை (MIS) தயாரிப்பதற்காக கடந்த ஆண்டினைப் போல மீளாய்வாண்டின் போதும் ரூபா 25 மில்லியன் வீதம் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் | இச்செயற்பாடுகளுக்காக சுகாதார அமைச்சினால் வழங்கிய நிதி எற்பாடானது நாட்டில் உருவாகிய பொருளாதார சிக்கல் நிலைமையை முன்னிட்டு 2022 ஆகஸ்ட் மாதம் திருத்திய பாதீட்டினால் இரத்துச்செய்யப்பட்டதனால் ஆரம்பிக்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகளை நிதி ஏற்பாடின்றி தற்பொழுது காணப்படுகின்ற மனித வளங்களைப் பயன்படுத்தி உரிய தகவல் | திணைக்களத்தின் தலைமை அலுவலக வளவு, வைத்தியசாலை, மருந்து பூங்கா, சமூக சுகாதார பிராந்திய அலுவலகம் முதலிய அனைத்து பிரிவுகளினதும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்யக்கூடிய முகாமைத்துவ தகவல் முறைமை |

| | | |
|---|---|---|
| அச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | முறைமையை உருவாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | ஸ்தாபித்தல் வேண்டும். |

### 3.3 செயலாற்றல் குறிகாட்டிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களமும் அதன் இணைந்த நிறுவனங்களும், வைத்தியசாலைகள், மருத்துவ நிலையங்கள், மருத்துவ பூங்காக்கள் என்பவற்றை உள்ளடக்கிய முழுமையான நிறுவன முறைமைக்குரிய செயற்பாடுகளின் செயல் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்காக செயலாற்றல் குறிகாட்டிகள் தோற்றுவிக்கப்பட்டிருக்காததுடன் செயற்பாடுகளின் செயல்முன்னேற்றமும் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. செயலாற்றல் கறிகாட்டிகளை தோற்றுவிப்பதற்குரிய நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வருவதுடன் அதற்கிணங்க செயற்பாடுகளின் செயல்முன்னேற்றத்தை மீளய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயலாற்றல் குறிகாட்டிகளை துரிதமாக தோற்றுவித்து செயற்பாடுகளின் செயல்முன்னேற்றத் தை மீளாய்வு செய்தல் வேண்டும். |

### 3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) நிதிக் கூற்றுக்களுடன் 2022 வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் வரைபு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் | உரிய அரசாங்க நிதி சுற்றறிக்கைக்கு இணங்க வருடாந்த செயலாற்றல் அறிக்கையை தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வருடாந்த கணக்குகளுடன் சரியான படிவத்தின் பிரகாரம் தயாரித்த ஆண்டறிக்கையின் வரைபு சமர்ப்பிக்கப்படுதல் |

| | | | |
|---|---|---|---|
| | 10.2 ஆம் பந்தியின் கீழ் அரசாங்க நிதி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டிக் கோவை இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்ட படிவத்தின் பிரகாரம் அந்த அறிக்கை சரியாக தயாரிக்கப்படவில்லை. | | வேண்டும். |
| (ஆ) | 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் ஆயுர்வேத திணைக்களத்தினால் நிதி ஆண்டு முடிவடைந்த 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2023 மே 20 ஆந் திகதி வரையும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தங்களின் பின்னர் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | அரசாங்க நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் தயாரித்து நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமனற்த்தில் முன்வைக்கப்படுதல் வேண்டும். |

### 3.5 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (உ) வழிகாட்டியின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டமானது ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்குள் தொடர்ச்சியாக நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும் அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்ம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பெறுகைத் திட்டத்தினை முறைப்படியாக நாளதுவரையாக்கி பேணுவதற்கு குறித்தக்கொள்ளப்படுகின்றது. | பிரதான பெறுகைத் திட்டத்தினை நாளதுவரையாக்கி பொருத்தமாக பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்திற்கும் தனியார் பாதுகாப்புச் சேவைகளை வழங்குபவர்களுக்குமிடையேயான சேவை உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு இணங்க ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தர் | திணைக்களத்தின் வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவ பூங்காக்களை மேற்பார்வை செய்யும் உத்தியொகத்தர்களிடமிருந்து இது தொடர்பாக | பெறுகை உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | தெதாடர்ச்சியாக 12 மணித்தியாலங்களுக்கு மேல் சேவைலயில் ஈடுபடுவார்களாகயிருந்தால் அதற்காக எதுவித கொடுப்பனவும் செய்யப்படலாகாது என்ற போதிலும் அதற்கு முரணாக 11 வைத்தியசாலைகளிலும் 6 மருத்துவ பூங்காக்களிலும் 12 மாணித்தியாலயத்திற்கு மேல் ஈடுபடுத்திய 2,619 சேவை தவணைகளுக்காக ரூபா 2,668,317 செலுத்தப்பட்டிருந்தது. மேலும் ஒவ்வொரு திகதியில் சேவையில் ஈடுபடுத்தப்படாதிருக்கையில் அதற்காக ஒரு நபரின் ஒரு நாள் சம்பளத்தை கழிப்பதற்கும் வருகைதராத ஊழியர்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்தை செலுத்தாதிருக்க வேண்டும் எனவும் காட்டப்பட்டிருந்தும் அதற்கு முரணாக நிர்ணயிக்கப்பட்ட ஊழியர்கள் நாளாந்தம் சேவையில் ஈடுபடுத்தப்படாத 562 சேவை தவணைகளுக்காக ரூபா 598,473 தொகை 4 தனிப்பட்ட பாதுகாப்பு சேவை வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | விசாரிக்கப்பட்டுள்ளதுடன் பதில் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் செயல்முன்னேற்ற அறிக்கை வழங்கப்படும் மதவாச்சி ஆயுர்வேதவைத்தியசாலையில் பாதுகாப்பு சேவையை வழங்குவதற்காக 2022 யூன் மற்றும் யூலை மாதங்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைப் பட்டியல்களிலிருந்து 104 சேவை தவணைகளுக்கு கழிக்கப்பட்டது. | சம்பந்தமாக துரித கவனம் லெுத்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நிபந்தனைகளுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை மீள அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் யூன் மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரை ஆயுர்வேத திணைக்களம் மற்றும் அதனுடன் இணைந்த 18 நிறுவனங்களில் பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்காக ரூபா 74,759,059 தொகையான ஒப்பந்தம் சம்பந்தமாக அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1 (உ) , 2.12, 4.2.2, 4.2.3, 4.3 ஆகிய வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் நாளாந்தம் 24 மணித்திலாயங்களை நிவர்த்தி செய்யும் வகையில் அனைத்து சேவை நிலையங்களில் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படுகின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்தும் வகையில் முறைப்படியாக மேற்பார்வை உத்தியோகத்தர்களை நியமித்து | எதிர்காலத்தில் பெறுகைத் திட்டத்திற்கு இணங்க முறைப்படியாக நாளதுவரையாக பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பெறுகை வழிகாட்டிகளுக்கு இணங்க பெறுகைகள் செயற்படுத்தப்பட வேண்டியதுடன் ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கை எடுத்து உடன்படிக்கை நிபந்தனைகளை மீறுதல் சம்பந்தமாக தாமதமின்றி நடவடிக்கை எடுத்து பொருத்தமான கட்டுப்பாட்டு முறைமை பின்பற்றப்படுதல் வேண்டும். பெறுகை வழிகாட்டிக் கோவைகள் |

| | | | |
|---|---|---|---|
| | நாளாந்தம் பெயர்ப்பட்டியலை பெற்றுக்கொள்ளல், சம்பவக்குறிப்புக்களை பரீட்சித்தல் அடிக்கடி சேவை நிலையத்தை பரீட்சித்துப் பார்த்தல் முதலிய உள்ளக பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது என்ற தகவல் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | சரியாக பின்பற்றப்பட்டன என்பதனையும் வெளிப்படைத் தன்மையுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதையும் உறுதிப்படுத்துவதற்காக எழுத்து மூல சான்றுகள் பேணப்படுதல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் யூலை மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரையான காலத்திற்காக ஆயுர்வேத திணைக்களத்தின் சுற்றாடலினை சுத்தம் செய்யும் சேவையை வழங்குவதற்கான ரூபா 1,947,258 தொகையான ஒப்பந்தம் சம்பந்தமாக அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.4.3, 2.5.1 (ஆ), 2.6.1 (ஆ) (i) . மற்றும் 4.2.2 ஆகிய வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க பெறுகைக்குழு மற்றும் தொழில்நுட்பக் குழுக்களின் அங்கத்தவர்கள் உரிய குழக்களுக்கு முன்னுரிமை வழங்கியிருக்காததுடன் பெறுகைக் கால அட்டவணை சம்பந்தமாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசு வழங்கப்பட்டிருக்காததனால் பெறுகைக் கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உரிய ஒப்பந்த உடன்படிக்கைகளின் நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்தகாரரினால் ஊழியர்களின் பெயர் கையொப்பம் விலாசம் என்பவற்றை உள்ளடங்கிய அறிக்கைகளையும் துப்பரவு செய்யும் இரசாயனப் பொருட்களின் சேர்மானம் மற்றும் பயன்படுத்துவதற்கு பொருத்தமானது என்பதற்கான முறையான தரச்சான்றிதழ்களும் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் ஊழியர்களுக்கு சீருடை மற்றும் அணிந்து கொள்வதற்காக அடையாள அட்டையையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் | கொவிட் தொற்று நோய் மற்றும் ஆர்ப்பாட்ட நிலைமையினால் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமையின் காரணமாக பெறுகைக் குழுவினைக் கூட்டுவதில் தாமதம் ஏற்பட்டது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஊழியர்களின் பெயர், கையொப்பம், விலாசம் என்பவற்றினை உள்ளடக்கிய ஒரு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஊழியர்களுக்கு சீருடைகளையும் அடையாள அட்டைகளையும் வழங்குமாறு ஒப்பந்த நிறுவனத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது. சேவைக்கு சமூகமளித்தல் மற்றும் வெளிச்செல்லல் சம்பந்தமான ஒரு அறிக்கை தாபன பிரிவினால் பேணப்பட்டுவருகின்றது. இந்த ஆண்டின் போது கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்கு முறையான சம்பளங்களையும் படிகளையும் செலுத்துகின்றன என்பதனையும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு பணம் அனுப்பிவைக்கப்படுகின்றன. என்பதனையும் உறுதிப்படுத்துமாறு சேவை வழங்கும் நிறுவனங்களுக்கு | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைகள் செயற்படுத்தப்பட வேண்டியதுடன் ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பது சம்பந்தமான பின்தொடர் நடவடிக்கைகள் எடுப்பதற்கும் ஒப்பந்த உடன்படிக்கைகளை மீறுவது சம்பந்தமாக தாமதமின்றி நடவடிக்கை எடுப்பதற்கு ம் பொருத்தமான கட்டுப்பாட்டு முறைமை பின்பற்றப்படுதல் வேண்டும். பெறுகை வழிகாட்டிக் கோவை சரியாக பின்பற்றப்பட்டது என்பதனையும் வெளிப்படை தன்மையுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதனையும் உறுதிப்படுத்துவதற்காக எழுத்துமூலம் சான்றுகள் பேணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஊழியர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் சம்பந்தமான தகவல்கள் மற்றும் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் மேற்கொள்ளப்பட்ட பணம் அனுப்புதல்கள் முதலிய தகவல்களை உரிய காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. | தெரியப்படுத்தப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் உரிய விடயங்களை உறுதிப்படுத்தி உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | |

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்காக பயனபடுத்தப்படுகின்ற 27 காணிகள் காணப்பட்ட போதிலும் திணைக்களத்தின் தலைமை அலுவலக சுற்றுப்புரம், பொரலை போதனா வைத்தியசாலை உட்பட்ட வைத்தியசாலைகள், மருத்துவ பூங்காக்கள், சுகாதார பிராந்திய அலுவலகங்கள், சுற்றுலா விடுதிகள் என்பன அமைந்துள்ள 19 காணிகள் மீளாய்வாண்டின் இறுதிவரையும் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை. | இக்காணிகளினைப் பொறுப்பேற்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதுடன் செயல்முன்னேற்றம் அறிக்கையிடப்படும். | உரிய காணிகளை பெறுப்பேற்கும் நடவடிக்கை துரிதப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்களை கொள்வனவு செய்தல் நாளதுவரையான மற்றும் சரியான தகவல்கள் கணக்கு தணிக்கையாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்படவில்லை. | காணிகள் மற்றும் கட்டிடங்கள் சம்பந்தமான அறிக்கைகள் நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய சொத்துக்கள் சம்பந்தமாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் செயல்முன்னேற்றத்தை எதிர்காலத்தில் அறிக்கையிடுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் உரிய அறிக்கைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.7 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஹம்பாந்தேட்டை சமல் ராஜபக்ச ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையின் வலை வேலியின் ஒரு பகுதி கள்வர்களால் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டிருந்ததுடன் அதன் நட்டம் ரூபா 763,360 ஆக திணைக்கள பொறியிலாளரால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. வைத்தியசாலைகளின் பாதுகாப்பு சேவை உனட்படிக்கையின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் நட்டத்தில் 40 சதவீதத்தினை பாதுகாப்புச் சேவை கம்பனியிடமிருந்து அறவீடு செய்வதற்கு சம்பவம் தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணை உத்தியோகத்தர் தீர்மானித்ததிருந்தார். அதற்கிணங்க பொறியியலாளர் மதிப்பீட்டில் 40 சதவீதம் அல்லது ரூபா 305,344 இனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது உரிய விசாரணை உத்தியோகத்தராலேயே பொறியியலாளரின் இணக்கப்பாடின்றி உரிய நட்டம் ரூபா 252,235 ஆக திருத்தி அதில் 40 தசவீதம் அல்லது ரூபா 100,894 மாத்திரம் பாதுகாப்பு சேவை கம்பனியிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஹம்பாந்தோட்டை சமல் ராஜபக்ச ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையின் வலை வேலியின் ஒரு பகுதி வெட்டப்பட்ட சம்பவம் தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணை உத்தியோகத்தர் பாதுகாப்பு சேவையினை வழங்கிய நிறுவனம் அல்லது அதன் ஊழியர்கள் நேரடியாக இந்த நட்டம் முழுவதற்கும் பொறுப்புக்கூற வேண்டியதில்லை என சிபாரிசு செய்யப்பட்டிருந்ததனால் ஏற்பட்ட நட்டத்தில் 40 சதவீதம் அதாவது ரூபா 100,894 மற்றும் 25 சதவீத மிகைக் கட்டணத்தை அந்த நிறுவனத்திடமிருந்து அறவீடு செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க உரிய பணம் அறவிடப்பட்டுள்ளது. | பொறியியலாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சரியான நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | மஞ்சந்தொடுவாய் வைத்தியசாலையில் சேவையாற்றி வென்னப்புவ பிரதேச சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆயுர்வேத மருந்துவருக்கு 2012 யூலை மாதத்திலிருந்து 2013 செப்தெம்பர் மதம் வரையான 15 மாதங்களின் போது திணைக்களத்தினால் சம்பளமாக ரூபா 548,376 செலுத்தப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக விசாரணைகளை | இது சம்பந்தமாக விசாரணைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் குற்றவாளியான ஆனந்த கிருஸ்னன் அவர்களுக்கு சம்பளமாக செலுத்தப்பட்ட ரூபா 548,376 மற்றும் 25 சதவீத தண்டப் பணமாக ரூபா 137,094 என்பனவாக அறவிட வேண்டிய ரூபா 685,470 மொத்த பணத்தில் ரூபா 354,600 | இச்சம்பவத்திற்கு 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்ததனால் நிலுவைப் பணத்தை உடனடியாக அறவீடு செய்வதற்கு அல்லது இது சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| நடாத்தி பொறுப்பக்கூறவேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாது 25 சதவீத மிகைக் கட்டணத்துடன் 2023 மார்ச் 02 ஆந் திகதியளவில் ரூபா 354,600 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. இச்சம்பவம் நடைபெற்று 10 ஆணடுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் மிகுதி ரூபா 330,870 பணத்தை உடனடியாக அறவீடு செய்வதற்காக உரிய மருத்துவருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது நிதிபிரமாணம் 104 (2) ''ஆ'' இற்கு இணங்க பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தரிடமிருந்து மிகைக் கட்டணம் விதிப்பதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட்டுள்ளதுடன் இன்னும் ரூபா 330,870 அறவிட வேண்டியுள்ளது. கடைசியாக 2023 மார்ச் 02 ஆந் திகதி ஒரு தவணைப் பணம் செலுத்தப்பட்டுள்ளது. | எடுப்பதற்கு அல்லது நிதிப்பிரமாணம் 104 (2) ''ஆ'' இன் பிரகாரம் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து மிகைக் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடக்கப்பட வேண்டியதுடன் ஆளணி நிருவாகப் பிரிவிற்கும் சம்பள நிருவாகப் பிரிவிற்குமிடையே நாளதுவரையான தொடர்ச்சியான ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்துகின்ற கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.8 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| (அ) ஆயுர்வேத திணைக்களத்திடம் 272 ஏக்கர்களுக்கு மேற்பட்ட பரப்பளவுடனான 07 மருத்துவ பூங்காக்கள் காணப்பட்டிருந்தும் அப்பூங்காக்களிலிருந்து கிடைக்கின்ற விளைச்சலை ஆயுர்வேத வைத்தியசாலைகளின் மருந்து உற்பத்திக்கு ஈடுபடுத்தும் வகையில் முறையான ஒரு வேலைத்திட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த அனைத்து மருத்துவ பூங்காக்களும் ஆராய்ச்சி மருந்து பூங்காக்கள் ஆனதுடன் தற்பொழுது மருத்துவ பூங்காக்களின் மூலம் ஆராய்ச்சி மற்றும் செயற்திட்ட சேவைகளுக்கு மேலதிகமாக மருந்துகளை பயிரிடுதல் மற்றும் அறுவடைகளை வைத்தியசாலைகளுக்கு வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் முறைப்படியாக மருத்துவ பூங்காக்களிலிருந்து மருந்து அறுவடைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அத்தியவசியமான | மருத்துவ பூங்காக்களிலிருந்து கிடைக்கின்ற விளைச்சலை ஆயுர்வேத வைத்தியசாலைகளின் மருந்து உற்பத்திக்கு ஈடுபடுத்துவதற்கும் அது தொடர்பாக போதியளவு அறிக்கைகளை பேணுவதற்கும் முறையான ஒரு பொறிமுறை ஸ்தாபித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மருந்துகளை மருத்துவ பூங்காகக்களில் பயிரிடுவதற்கும் வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்குமான நடவடிக்கைகள் தற்பொழுது திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | திணைக்களத்திடம் 55 வாகனங்கள் காணப்படுவதுடன் இந்த வாகனங்களுக்குரிய சம்பவக் குறிப்பு புத்தகங்களும் ஓட்ட அட்டவணைகளும் சம்பந்தமாக உரிய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை, எரிபொருள் பரீட்சிப்பு செய்யப்படாமை, வாகனங்களுக்கு எரிபொருளை நிரப்பும் போது அந்த நடவடிக்கையானது ஒரு பதவிநிலை உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கிழ் இடம்பெற்றிருக்காமை, பல சந்தர்ப்பங்களில் இடம்பெற்ற எரிபொருள் களவு சம்பந்தமாக போதியளவு நடவடிக்கை எடுக்கப்படாமை, சாரதிகளின் ஒழுக்க கட்டுப்பாட்டிற்காக போதியளவு கட்டுப்பாட்டு முறைமை பின்பற்றப்படாமை முதலிய விடயங்களின் காரணமாக திணைக்களத்தின் வாகன நிருவாகம் மற்றும் வாகன பாதுகாப்பு சம்பந்தமாக திருப்தியான நிலைமை காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தின் வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்கள் மற்றும் ஓட்ட அட்டவணைகள் சம்பந்தமாக உரிய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எரிபொருளை நிரப்பும் போது அந்த நடவடிக்கையானது பதவிநிலை உத்தியொகத்தரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எரிபொருள் களவு சம்பந்தமாக நி.பி 104 விசாரணை மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் சிபாரிசுக்கு இணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடக்கப்படும். போக்குவரத்து பிரிவிற்கு பொறுப்பாக உள்ள பதவிநிலை உத்தியொகத்தர் பதவியின் வெற்றிடங்களை துரிதமாக நிரப்புவதற்கு உட்பட்ட போக்குவரத்து பிரிவினை மறுசீரமைப்புக்கும் நடவடிக்கை மற்றும் சாரதியின் ஒழுக்கம் சம்பந்தமான நடவடிக்கையை முறைப்படியாக மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகளுக்கு இணங்க கட்டுப்பாட்டு நடைமுறை சிறப்பாக இடம்பெறுகின்றது. என்பது அவதானிக்கப்படாதத னால் பந்தியில் குறிப்பிட்ட விடயங்கள் சம்பந்தமாக கூடுதல் கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | செயற்படும் நிலையில் காணப்படாத திருத்தம் செய்தல் வினைத்திறனற்ற மற்றும் வினைத்திறனான வாகனங்கள் தொடர்பான சரியான தகவல்கள் 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 05/2020 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்கு தணிக்கையாளர் | திணைக்களத்தின் வாகனங்கள் தொடர்பான தகவல்கள் கணக்கு தணிக்கையாளர் நாயகத்திற்கு இலத்திரனியல் விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது டன் அத்தகவல் கிடைக்கவில்லை எனக் | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய காலத்தில் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைகளை தாமதமின்றி தயாரித்து அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | நாயகத்தின் அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்டு 2021 சனவரி 29 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்திற்கு இணங்க மீண்டும் அத்தகவல் 2021 பெப்ரவரி 17 ஆந் திகதி பெக்ஸ் மூலம் அனுப்பிவைக்கப்பட்டு தொடக்க பிரதியும் அனுப்பப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 04 வைத்தியசாலைகளின் 04 பிரதான மருத்துவ உத்தியோகத்தர்களில் இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்தும் 05 காசாளர்களிடமிருந்தும் மாத்திரம் ரூபா 35,500 பிணைவைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டு மூன்றாம் தரப்பினர்களுக்கு மிண்டும் செலுத்தும் குறிக்கோளில் பேணப்பட்டு வருகின்ற 6000-0-0-13-0-084 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய வைத்தியசாலைகளின் பிரதான மருத்துவ உத்தியோகத்தர்களிடமிருந்தும் காசாளரிடமிருந்தும் பிணைவைப்பினை பெற்றுக்கொள்ளாமைக்கான காரணம் சமர்ப்பிக்கப்படவில்லை. | வைப்புக் கணக்கிலுள்ள மீதிகளுக்காக முறைப்படியாக சேமிப்புக் கணக்குகள் திறக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தி பிணை வைப்பினை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | முறைப்படியாக சேமிப்புக் கணக்கினை திறந்து பிணை வைப்பினை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பிணைகள் வைப்புச் செய்ய வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்களிடமிருந்தும் பிணைவைப்பு பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (உ) | தேவைபாட்டினை சரியாக இனங்கண்டு கொள்ளாதும் சாத்தியவள ஆய்வினை மேற்கொள்ளாதும் 2015 மார்ச் 16 ஆந் தகதி ரூபா 28 மில்லியன் செலவு செய்து பண்டாரநாயகா ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 14 இயந்திரங்களும் உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவ்வற்றில் ரூபா 21 மில்லியன் பெறுமதியான 8 இயந்திரங்கள் 2023 யூலை 11 ஆந் திகதி வரை பொருத்தப்பட்டிருக்கவில்லை.<br>ரூபா 14,591,311 மொத்த கிரமான 06 இயந்திரங்கள் உற்பத்திச்சாலைக்கு தேவையற்றது என 2020 ஒக்தோபர் 05 ஆந் திகதி நியமிக்கப்பட்ட ஒரு குழுவினால் இனங்காணப்பட்டிருந்தது.<br>முறையான ஒப்பந்த உடன்படிக்கையினையும் சேவை செய்தல் மற்றும் திருத்தம் செய்வதற்கான | நாவின்ன ஆராய்ச்சி நிறுவனத்தில் காணப்பட்ட இயந்திரங்களும் உபகரணங்களும் விசேட ஒரு குழுவின் மூலம் விசாரணைகள் மேற்கொண்டு இது சம்பந்தமான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சு செயலாளரினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளதனால் அதற்கிணங்க மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அனைத்து இயந்திரங்களையும் வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு அல்லது ஆயுர்வேத வைத்தியசாலைகளில் அல்லது ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் மருந்து உற்பத்திக்கு ஈடுபடுத்துவதற்காக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஆத்தேவைப்பாட்டினை சரியாக இனங்காணாது முறையான சாத்தியவள ஆய்வின்றியும் இக்கொள்வனவுகளுக்காக பங்களிப்புச் செய்த அனைத்து உத்தியோகத்தர்கள் சம்பந்தமாகவும் தேவையான |

| | | |
|---|---|---|
| உடன்படிக்கையனையும் மேற்கொள்ளாது இந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததனால் பொருத்தப்பட்ட இயந்திரங்களும் உபகரணங்களும் மீளாய்வாண்டு வரை பயன்பாட்டிற்கு எடுத்தக்கொள்ள முடியாத நிலையில் காணப்பட்டது. இதற்கிணங்க இச் செயயற்திட்டத்திற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 28,342,712 பணமும் சிக்கனமற்ற செலவாக இருந்தது. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 3.6, 3.9 11 மற்றும் 11.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நிறுவனத்தின் குறிக்கோளை அடைந்துகொள்வதனை முன்னிட்டு தனது வளங்களை வினைத்திறனாக செயற்படுத்த வேண்டியதுடன் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளை அடைந்து கொள்ளும் வகையில் நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகளும் அந்த இலக்குகளை நிறைவேற்றுவதற்காக காணப்படும் முரண்பாடுகளையும் செயல்முன்னேற்றத்தை அறவீடு செய்வதற்காக பொருத்தமான குறிகாட்டிகளும் இனங்காணப்பட வேண்டியிருந்தது. எனினும் திணைக்களத்தினால் அவ்வாறான குறிகாட்டிகளை இனங்கண்டு குறிக்கோளில்களில் அடைந்துகொள்ளப்பட்ட அளவு மற்றும் மீறல்களைப் போல கவனம் செலுத்தப்பட வேண்டிய பல்வேறு துறைகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக உரிய இலக்குகளையும் குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்து அது தொடர்பான ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வது தொடர்பாக இலக்குகளையும் குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கும் செயல் முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்திற்காக ஒரு முகாமைத்துவ தரவு முறைமையை தயாரித்து அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போதும் உரிய தரவு முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க திணைக்களமும் அதன் இணைந்த நிறுவனங்களும் வைத்தியசாலைகள் மருத்துவ நிலையங்கள் என்பவற்றை உள்ளடக்கிய அனைத்து நிறுவனங்களும் முறைமைக்குரிய நாளதுவரையான முகாமைத்துவ தகவல்களை வினைத்திறனாகப் பெற்றுக்கொள்வது சிக்கலாக காணணப்பட்டதுடன் திணைக்களத்தின் பதவியணியினர்களது வருகை மற்றும் வெளிச்செல்லலினை பதிவு செய்யும் கட்டுப்பாடு, செயலாற்றல் கட்டுப்பாடு, சம்பள கட்டுப்பாடு, மேலதிக நேர வேலைக் கட்டுப்பாடு, தனிப்பட்ட கேவைகளின் கட்டுப்பாடு முதலிய கட்டுப்பாடுகள் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டன என்பது அவதானிக்கப்பட்டது. | இந்நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக 2023 ஆம் ஆண்டின் போது நிதி ஏற்பாடு வழங்கப்படாதிருந்ததுடன் சுயமாக சேவைகளை வழங்குவதற்காக முன்வந்துள்ள வைத்தியர்களின் மேற்பார்வையின் கீழ் தகவல் தொழில்நுட்ப பயிற்சி நடவடிக்கைகளுக்காக சேர்த்தக் கொள்ளப்பட்டுள்ள பயிற்சி உத்தியோகத்தர்களுடன் இந்நடவடிக்கையானது தற்பொழுது இடம்பெற்று வருனிக்றது. எதிர்காலத்தில் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டதன் பின்னர் முறையான வேலைத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை திட்டமிடப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் தலைமை அலுவலக வளவு, வைத்தியசாலைகள், மருத்துவ பூங்காக்கள், சமூக சுகாதார பிராந்திய அலுவலகங்கள் முதலிய அனைத்து பிரிவுகளையும் ஒருங்கிணைப்புச் செய்யக்கூடிய ஒரு முகாமைத்துவ தரவு முறைமை ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரித்த பதவியனியிணர் 2,362 ஆக இருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறான உள்ளபடியான பதவியிணர் 1,371 ஆக இருந்ததனால் அங்கீகரித்த பதவியணியில் 42 சதவீதத்திற்குச் சமனான வெற்றிடங்களின் எண்ணிக்கை 969 ஆகும். இந்த வெற்றிடங்களில் சிரேஷ்ட மட்டத்தில் 83 வெற்றிடங்களும் இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்டங்களில் 368 வெற்றிடங்களும் ஆரம்ப மட்டத்தில் 241 வெற்றிடங்களும் காணப்பட்டமையின் காரணமாக திணைக்களத்திலும் அதே போல | திணைக்களத்தின் ஆரம்ப மட்டத்தின் வெற்றிடங்களை பூரணப்படுத்தும் போது அரசாங்க வேலையில் வெற்றிடங்களை நிரப்புவது சம்பந்தமாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை உப குழுவின் சிபாரிசின் கீழ் 277 பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்கள் ஆயுர்வேத சேவை உதவியாளர்களாக சேர்த்துக்கொள்ளப்பட்டு 108 வெற்றிடங்களுக்காக பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதுடன் 62 ஆயுர்வேத மருத்துவ | சிரேஷ்ட மட்டத்திலுள்ள பதவிகள் மற்றும் வைத்தியசாலைகளின் அத்தியவசிய பதவிகளுக்கு முன்னுரிமை வழங்கி காணப்படுகின்ற மனிதவளங்களிலிருந்து உச்ச அளவு வினைத்திறனைப் பெற்றுக்கொள்வதற்காக பதவியணியினர் மறுசீரமைப்புச் செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதன் கீழுள்ள வைத்தியசாலைகளிலும் செயலாற்றலுக்கு அதிக தாக்கம் ஏற்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (இ) | பண்டாரநாயக்கா ஞாபகார்த்த ஆராய்ச்சி நிறுவனத்திற்காக ஒவ்வொரு விடயத்துறை தொடர்பாக 18 ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 12 ஆராய்ச்சி உதவியாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் அவற்றில் எவரையும் சேர்த்தக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் சமல் ராஜபக்ச ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலைக்கு ஆராய்ச்சி பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கிணங்க ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலைகளை உருவாக்கியதன் மூலம் எதிர்பார்த்த செயலாற்றலுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. | ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த 6 ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் 2021 ஆம் ஆண்டிலிருந்து விஞ்ஞான சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளனர். 2019 ஆம் ஆண்டின் பின்னர் ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றிருக்கவில்லை. ஹம்பாந்தோட்டை ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலைக்கு ஆராய்ச்சி பதவியனியிணர் அங்கீகரித்துக்கொள்ளப்படாததுடன் நி.பி 71 இன் பிரகாரம் அதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையை உருவாக்குவதன் மூலம் எதிர்பார்த்த செயலாற்றலினை அடைந்து கொள்வதற்கு பொருத்தமான வகையில் பதவியணியை மறுசீரமைப்புச் செய்தல் வேண்டும். |